**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| கிறிஸ்தவ நாகரிகம் | தரம் :- 12 (2019) | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

01. பல ஆண்டுகளுக்கு முன்பே மனித இனம் தோன்றினாலும் நாகரிகம் குறித்துப் பேசப்பட்ட காலமாகக் கருதப்படுவது
1) கி.மு 2000 2) கி.மு 8000 3) கி.மு 1000 4) கி.மு 800 5) கி.மு 1800

02. மனித வரலாற்றில் தோன்றிய பழமைவாய்ந்த நாகரிகமாகக் கருதப்படுவது
1) கிரேக்க நாகரிகம் 2) உரோமைய நாகரிகம் 3) அசீரிய நாகரிகம்
4) சுமேரிய நாகரிகம் 5) பாரசீக நாகரிகம்

03. பண்பாடு பற்றிய பொருத்தமற்ற கூற்று
1) ஒரு சமூகத்தின் நடை, உடை, பழக்கவழக்கம் போன்ற தனித்துவமான அம்சங்களை உள்ளடக்குவது.
2) கூடுதலாக ஆன்மீகத் தன்மையை வலியுறுத்துகிறது.
3) புதுமைத் தன்மையை வலியுறுத்தி நிற்கிறது.
4) கிராமப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்களை எடுத்தியம்புகிறது.
5) இது கற்றல் வழியாக ஒரு தலைமுறையில் இருந்து மற்றைய தலைமுறைக்கு கையளிக்கப்படுகிறது.

04. விவசாயமும் விலங்கு வளர்ப்பும் பொருளாதார நடவடிக்கைகளாக அமைந்த நாகரிகம் எது?
1) மொசபெத்தேமிய நாகரிகம் 2) நைல்நதி நாகரிகம் 3) கிரேக்க நாகரிகம்
4) உரோமைய நாகரிகம் 5) அசீரிய நாகரிகம்

05. எகிப்திய நாகரிகம் பற்றிய கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - உலகின் முதல் வரைபடம் இவர்களாலேயே வரையப்பட்டது.
B - இது ஆபிரிக்காக் கண்டத்தின் மிஷிறிக் பிரதேசத்தில் வளர்ச்சியடைந்ததாகும்.
C - கனவுகளுக்குப் பலன் கூறும் பழக்கம் இவர்களிடம் காணப்பட்டது.
D – மரணத்தின் பின்பு வாழ்வு உண்டு என்ற நம்பிக்கை இவர்களிடம் காணப்பட்டது.
E - ஆட்சி அதிகாரம் தெய்வத்திடம் இருந்தே அரசனுக்கு கிடைத்திருப்பதாக நம்பினார்.
மேற்குறித்த கூற்றுக்களுள் சரியானவை
1) ABC 2) BCD 3) ADE 4) BCE 5) BDE

06. சாரோன் சமவெளி பற்றிய பிழையான கூற்று
1) இது கடற்கரைப் பகுதியின் மையப்பகுதியாகும்
2) இங்கு ஒலிவ் மரங்களும் தானிய வகைகளும் அதிகம் காணப்படும்.
3) இங்கு தான் யோப்பா நகரம் காணப்படுகின்றது.
4) இது கார்மேல் மலையில் இருந்து நீளமுடையது.

07. உலகில் முதல் கட்டப்பட்ட பிரமாண்டமான ஆலயம் எது
1) ஜெருசலேம் 2) எதேசா 3) பசிலிக்கா 4) சிகுராத் 5) கொண்ஸ்ஸாந்துநோபின்

08. இஸ்ரயேலின் முதல் முடிக்குரிய மன்னராகக் கருதப்படுவர்
1) தாவீது 2) சாலமோன் 3) சிம்சோன் 4) எரோபோவாம் 5) சவுல்

09. மொசபெத்தேமிய நாகரிகத்தின் பின்வரும் எத்தகைய கூறு / கூறுகள் யூத நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தின.

A - மரணத்தின் பின்பு வாழ்வு, உண்டு என நம்பினர்

B - விவசாய நடைமுறைகள் பின்பற்றப்பட்டது

C - அரசன் தெய்வ அதிகாரம் பெற்றவர் என்ற நம்பிக்கை

D - பல்சமயப் பின்னணியில் வாழ்ந்த மக்கள்

1) AD 2) B 3) BC 4) CD 5) AB

10. அசீரியர் வட அரசைக் கைப்பற்றிய ஆண்டு

1) கி.மு 932 2) கி.மு 539 3) கி.மு 722 4) கி.மு 604 5) கி.மு 333

11. கி.மு 63 இல் ஜெருசலேமைக் கைப்பற்றி பலஸ்தீனாவை உரோமையரின் ஆட்சிக்கு உட்படுத்தியவர்

1) ரோமுலஸ் 2) பொம்பேயி 3) ஏரோது

4) யூலியஸ்சீசர் 5) அந்தியோகு எபிபானஸ்

12. இஸ்ராயேல் மக்கள் யாருடைய காலத்தில் எகிப்துக்குச் சென்றர்

1) ஆபிரகாம் 2) ஈசாக் 3) யாக்கோபு 4) யோசேப் 5) மோசே

13. கிரேக்க ஆட்சிக்காலம் எனப்படுவது

1) கி.மு 173 – கி.மு 63 2) கி.மு 333 – கி.மு 63 3) கி.மு 63 – கி.மு 380

4) கி.மு 63 – கி.பி 470 5) கி.மு 539 – 333

14. கற்றோரின் மொழியாகக் கருதப்பட்டது

1) லத்தீன் 2) எபிரேயம் 3) அரமெயிக் 4) கொய்னே 5) கிரேக்கம்

15. அரமேய மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட திருவிவிலியம் …………………….. என அழைப்பர்

1) செப்துவாஜித் 2) கொய்னே 3) தால்மூட் 4) தார்கும் 5) வுல்கத்தா

16. லத்தீன் திருவிவிலியத்தை எழுதுவதற்கு அதிகாரம் அளித்த திருத்தந்தை

1) திருத்தந்தை 10ம் சிங்கராயர் 2) திருத்தந்தை 3ம் பவுல் 3) திருத்தந்தை 2ம் யூலியஸ்

4) திருத்தந்தை 10ம் பத்திநாதர் 5) திருத்தந்தை தமாஸ்கஸ்

17. வழிபாட்டின் போது முழந்தாளிடும் மரபை கிறிஸ்தவர்கள் யாரிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்

1) கிரேக்கர் 2) எகிப்தியர் 3) உரோமர் 4) பாரசீகர் 5) அசீரியா

18. அண்மையில் திபேரியாவிற்கு அருகில் அகழ்வாராட்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்ட பழங்கால நகரத்திற்கு சொந்தக்காரர் யார்

1) பாரசீகர் 2) உரோமர் 3) சுமேரியர் 4) அசீரியர் 5) கானானேயர்

19. உரோமைய சமூகத்திலே பிளவியன்ஸ் பற்றிய சரியான கூற்றுக்கள்.

A - இவர்கள் நில உடமையாளர்களாகவும் ஆட்சி அதிகாரம் உடையவராகவும் காணப்படுகின்றனர்.

B - சிறு விவசாயிகள், வர்த்தகர்களாகக் காணப்படுகின்றனர்.

C - 90 வீதமானவர்கள் இந்த வகுப்பைச் சார்ந்தவர்களாகக் காணப்பட்டனர்.

D - உரோமைச் சமூகத்திலே அதிகம் செல்வாக்கு மிக்கவர்கள்.

1) BC 2) AB 3) BD 4) CD 5) AD

20. உரோமைய லத்தீன் வழிபாட்டு முறையைப் பின்பற்றி கிறிஸ்து பிறப்பு விழா மேற்கு நாடுகளுக்கு அறிமுகஞ் செய்யப்பட்ட காலப்பகுதி

1) கி.பி 33 2) கி.மு 366 3) கி.பி 313 4) கி.பி 380 5) கி.பி 472

(20X1=20 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II

**பகுதி II "அ" பகுதியில் இருந்து ஏதாவது இருவினாவினையும் "ஆ" பகுதியில் இருந்து ஏதாவது இருவினாவினையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

### "அ" பகுதி

01.

1) நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான ஒற்றுமைகள் வேற்றுமைகள் இரண்டு தருக?
2) கிறிஸ்தவ நாகரிகத்தில் செல்வாக்கு செலுத்திய பிற நாட்டு நாகரிகங்கள் 4 குறிப்பிடுக.
3) மொசபெத்தேமிய நாகரிகத்தின் சிறப்புப் பண்புகள் 4 எழுதுக?
4) யூத நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய எகிப்திய நாகரிகத்தின் கூறுகள் 4 எழுதுக.
5) மொசபெத்தேமியாவிற்கு முன்பு வழங்கப்பட்ட பெயர்களையும் தற்போது வழங்கப்படும் பெயரையும் குறிப்பிடுக.

(5X4=20 புள்ளிகள்)

02.

1) கிரேக்க மெய்யியல் சிந்தனைகள் மூன்றையும் குறிப்பிடுக.
2) கிறிஸ்தவ நாகரிகத்தில் கிரேக்க நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தினை நான்கு கருத்துக்களில் எழுதுக.
3) பலஸ்தீனாவை தமது படையெடுப்புக்களாலும் ஆட்சி அதிகாரங்களாலும் அடிமைப்படுத்தி ஆளுகைக்கு உட்படுத்திய நான்கு பிரிவினரைக் குறிப்பிடுக?
4) பாரசீகர், அசீரியர் என்பவர்களின் சிறப்புப் பண்புகள் இவ்விரண்டு முறையே எழுதுக.
5) "ஹெல்லனிசம்" என்பதனை சுருக்கமாக விளக்குக.

agaram.lk

(5X4=20 புள்ளிகள்)

03.

1) கிரேக்கத்தத்துவ ஞானியான அரிஸ்ரோட்டில் முன்வைத்த காரண காரியக் கொள்கையின் நான்கு காரணிகளையும் குறிப்பிடுக.
2) உரோமைய நாகரிகததின் சிறப்பம்சங்கள் நான்கு எழுதுக?
3) உரோமைய கட்டிட கலையான பசிலிக்கா வடிவில் அமைக்கப்பட்ட ஆலயங்கள் நான்கு குறிப்பிடுக?
4) கலிலோவில் காணப்பட்ட முக்கியமான இடங்கள் நான்கு குறிப்பிடுக.
5) இஸ்ராயேல் மக்களை வழி நடத்திய நீதித் தலைவர்கள் நால்வரை குறிப்பிடுக.

(5X4=20 புள்ளிகள்)

## "ஆ" பகுதி

04.

1) உரோமைய சமூக அமைப்பின் இரு பெரும் பிரிவுகளையும் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குக. (10 புள்ளிகள்)

2) உரோமைய வழிபாட்டு முறைகளைக் குறிப்பிட்டு அவை கிறிஸ்தவத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியது என்பதை விளக்குக? (10 புள்ளிகள்)

05.

1) பலஸ்தீனாவில் செல்வாக்குச் செலுத்திய மேலைத்தேய நாகரிகங்களைக் குறிப்பிட்டு கிரேக்க நாகரிகத்தின் சிறப்பம்சங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

2) இஸ்ராயேல் மக்களை ஆட்சி செய்த அரசர்களைக் குறிப்பிட்டு, நீதித்தலைவர்களுடைய பணிகளை விட மக்கள் அரசர்களை எதிர்பார்த்தமைக்கான காரணங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

06.

1) இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணத்தில் சீனாய் மலை உடன்படிக்கையின் முக்கியத்துவத்தினை விளக்குக. (10 புள்ளிகள்)

2) விடுதலைப் பயணத்தின் சிறப்பு வாய்ந்த சீனாய் மலை உடன்படிக்கைக்கும், இன்றைய உலகில் மனிதர்களிடையே, நாடுகளிடையே கைச்சாத்திடப்படும் உடன்படிக்கைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

agaram.lk

07.

1) பலஸ்தீனாவின் முதுகெலும்பாகத் திகழும் மேற்கு மலைப்பகுதியை புவியியல் ரீதியாக பிரித்து அவற்றின் சிறப்பம்சங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

2) பலஸ்தீனாவின், மேற்கு மலைப்பகுதியின் புவியியல் பிரதேசங்களில் இடம்பெறும் நகரங்களாகிய நசரேத், கானா, பெத்சாயிதா, நயின் என்பன இயேசுவின் பணி வாழ்வுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)